**தலைப்பு – 265 மன்னார் மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் இரண்டாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று, என்பன மன்னார் மாவட்ட செயலகத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக் கணக்குகளிலும் இணக்கக் கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ளன. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும்,கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல் தொடர்பான பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையறைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப் பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

---

தலைப்பு 265 மன்னார் மாவட்ட செயலகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளது வரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 19 செப்தெம்பர் 2017 ஆம் திகதி மாவட்ட செயலாளருக்கு

வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக மன்னார் மாவட்ட செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன.கணக்காய்வு அவதானிப்புக்கள் இந்த அறிக்கையின் 2.11 ஆம் பந்தி முதல் 2.9வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமான தன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப்பொறுப்பை நிறைவேற்றுகையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்கு விதிகளுடன் இணங்கி நடக்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம்வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1. செயல்நடவடிக் கைத் திட்டத்திலுள்ள செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை . | 2.3.1(அ) |
| | | 2. செயற்திட்டங்க ளை நிறைவேற்றுவதில் கால தாமதம் ஏற்பட்டமை | 2.3.1(ஆ) |
| | | 3.பெறுகை நடைமுறைகளை அமுல்படுத்துதல் | 2.3.2 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)இ | நிதிப்பிரமாணம்மற்றும் அரசாங்கத்தின் ஏனைய துணை அறிவுறுத்தல்கள்தமது திணைக்களத்தில் பின்பற்றப்படுகின்றனவா என்பதும்தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றனவா என்பதும் | 1. பொதுவைப்புக் கணக்குகளில் குறைபாடு | 2.07 |
| | | 2. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை | 2.08 |
| | | 3. மனித வள முகாமைத்துவத்தில் பலவீனங்கள் | 2.09 |
| 128(1)ஏ | நிலுவையாகக் காணப்பட்ட கட்டணங்கள் முதலியவற்றை அறவீடு செய்வதற்கு விசேட ஒழுங்கு விதிகளைப் பயன்படுத்துவதற்கு மற்றும் அந்த நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப்பணம் தொடர்பாக அவற்றினை அறவீடு செய்வதனைத் துரிதப்படுவதற்கும் எடுக்கப்படுகின்ற முயற்சிகள் தொடர்பாக ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது ஏனைய தரப்பினர்களால் பணிக்கப்பட்டவாறு தமக்கு அறிக்கையிடுதல். | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளின் நிலுவையாகவிருந்த கடன் மீதிகளை அறவீடு செய்ய முடியாதிருந்தமை | 2.6 |
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களின் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் பின்பற்றப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுத்தல். | நிதியுடன் தொடர்புபடும் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புக்கள் பெற்றுக் கொள்ளப்படாமை | 2.11 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 2.1 மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பணிகள்

(அ) மாவட்ட வளங்களை பயன்படுத்தி வினைத்திறனுள்ள பயன்பாட்டுடன் திட்டங்களை வடிவமைத்தல்.

(ஆ) நிதி நடவடிக்கைகள் மற்றும் பரிமாற்றல் நடைமுறைகள் மூலம் எழுச்சிக்குள்ளாக்கி இலக்குகளை அடைதல்.

(இ) கலை கலாசார பண்புகளையும், விழுமியங்களையும் அதன் உயர் மதிப்புகளையும் ஊக்குவிக்கும் அமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(ஈ) மாவட்டத்தின் பிரதேச மட்டத்திலான நிலையான அபிவிருத்திகள்.

(உ) பொது மக்களை அனர்த்தத்திலிருந்து பாதுகாத்தல்.

**2.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் அவற்றின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள்**

மாவட்ட செயலகத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்டுள்ள நிறுவனங்களும் செயற்பாடுகளும் கீழே தரப்படுகின்றன.

| மாவட்ட செயலகத்தின் கீழுள்ள நிறுவனங்கள் | தோற்றுவிக்கப்படுவதற்கான அதிகாரம் | செயற்பாடுகள் |
| --- | --- | --- |
| மன்னார் நகர பிரதேச செயலகம்<br>நானாட்டான் பிரதேச செயலகம்<br>மாந்தை மேற்கு பிரதேச செயலகம்<br>முசலி பிரதேச செயலகம்<br>மடு பிரதேச செயலகம் | 1992 இன் 58 ஆம் இலக்க பிரதேச செயலகங்களைத் தோற்றுவிக்கும் அதிகாரச்சட்டம் | மத்திய அரசாங்கத்தாலும் மாகாண சபைகளாலும் ஒப்படைக்கப்படுகின்ற நிர்வாக மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை பிரதேச மட்டத்தில் அமுல்படுத்துதல். |

**2.3 செயலாற்றல்**

**2.3.1 செயற்பாடுகளை நிறைவேற்றாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் பெறப்பட்டிருந்தன.

(அ) **செயல்நடவடிக்கைத் திட்டத்திலுள்ள செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை.**

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் 22 பிரதான கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா1.25 மில்லியன் கூட்டுமொத்தம் நிதி ஏற்பாட்டினை கொண்டிருந்த இரு பிரதான செயற்பாடுகள் மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) **செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

மீளாய்வாண்டின் போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட ரூபா 1.73 மில்லியன் பெறுமதியான மாளிகைதிடல் பாலர் பாடசாலை, சொர்ணபுரி மாதர்கிராம அபிலிருத்தி சங்கம்,பாலையடி புதுக்குளம் மற்றும் கறுங்கண்டல் பொதுநோக்க மண்டபம் ஆகிய 04 செயற்திட்டங்களுக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு சீரற்ற காலநிலை காரணமாக உரிய காலத்தில் பூர்த்தி செய்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

2.3.2 **பெறுகை நடைமுறைகளை அமுல்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் பெறப்பட்டிருந்தன.

(அ) **பெறுகை திட்டங்கள் மற்றும் ஆரம்ப நிலை**

இக் திட்டத்தின் கீழ் பிரதான கொள்வனவுத்திட்டம், வருடாந்த உத்தேச கொள்வனவுத் திட்டம், கொள்வனவுப் பொதியின் சுருக்கம், ஆரம்பக் கொள்வனவுத்திட்டம்,இனங்காணப்பட்ட கொள்வனவுடன் தொடர்பான விசேட அனுமதியைப் பெறுவதற்குத் தேவையான ஆவணங்கள் விதந்துரைப்புகள், திட்டமிடல், அடிக்குறிப்புகள், நிர்மாணங்கள் ஆகியன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வழங்கு பொருட்கள், சேவைகளை பெற்றுக் கொள்ளும் போது மூன்று பேரைக் கொண்ட கேள்விச் சபையின் அனுமதியுடன் பெறுகைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்காது ரூபா 1.59 மில்லியன் பெறுமதியான பொருட்கள் பெறப்பட்டிருந்தன.

**2.4 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாரளுமன்றத்தினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்துதல்**

2017 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த 05 வருட காலப்பகுதியினுள் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாடு, பயன்பாடு மற்றும் சேமிப்பு தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **சதவீதம்** |
| 2013 | மீண்டெழும் | 145.25 | 144.98 | 0.28 | 0.18 |
| | மூலதனம் | 22.70 | 22.30 | 0.39 | 1.74 |
| | மொத்தம் | 167.95 | 167.28 | 0.67 | 0.40 |
| 2014 | மீண்டெழும் | 170.60 | 158.76 | 11.84 | 6.94 |
| | மூலதனம் | 120.95 | 99.12 | 21.83 | 18.05 |
| | மொத்தம் | 291.55 | 257.88 | 33.67 | 11.55 |
| 2015 | மீண்டெழும் | 195.22 | 193.40 | 1.82 | 0.93 |
| | மூலதனம் | 194.10 | 118.30 | 75.80 | 39.05 |
| | மொத்தம் | 389.32 | 311.70 | 77.62 | 19.94 |
| 2016 | மீண்டெழும் | 212.00 | 198.00 | 14.00 | 6.60 |
| | மூலதனம் | 187.00 | 184.72 | 2.27 | 1.22 |
| | மொத்தம் | 399.00 | 382.73 | 16.27 | 4.08 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2017 | மீண்டெழும் | 200.79 | 195.10 | 5.69 | 2.84 |
| | மூலதனம் | 120.00 | 110.33 | 9.66 | 8.05 |
| | மொத்தம் | 320.790 | 305.43 | 15.35 | 4.79 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரைக்குமான ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மூலதனச் செலவுகளுக்கான நிதி ஏற்பாடு 427 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) பத்து மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 17.35 மில்லியன் ஆரம்ப நிதியேற்பாடு பத்து சந்தர்ப்பங்களில் 14 சதவீதம் தொடக்கம் 69 சதவீதத்தால் குறைக்கப்பட்டு ஏனைய 10 மீண்டெழும் நிதியேற்பாடுகளில் 08 சதவீதம் தொடக்கம் 520 சதவீதத்தால் நிதி ஒழுங்கு விதி 69 இற்கு அமைவாக அதிகரிக்கப்பட்டிருந்தன.

(இ) மூலதன செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததில் ரூபா 9.64 மில்லியன் தொகையான மொத்த தேறிய நிதியேற்பாடும் எஞ்சியிருந்தது. மூலதன செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் நிதியேற்பாட்டினை பயன்படுத்தியதன் பின்னரான மீதி அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 8 சதவீதம் முதல் 91 சதவீதம் வரையான வீச்சினை கொண்டிருந்தது.

## 2.5 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு

27 ஏனைய அமைச்சுக்கள், 17 திணைக்களங்கள்,சனாதிபதி மற்றும் பிரதம மந்திரி அலுவலகங்கள் என்பவற்றால் பல்வேறு செயற்பாடுகளுக்காக மாவட்ட செயலகத்தில் ரூபா 2,315.12 மில்லியன் கூட்டு மொத்த நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அவற்றில் ரூபா 2,057.70 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 257.42 மில்லியன் அல்லது 11.12 சதவீதமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) 5 சதவீதத்திற்கு மேற்பட்ட 29 செலவினவிடயங்களின் சேமிப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 59.65 மில்லியன் செலவின விடயங்களில் 40 வீதம் தொடக்கம் 100 வீதம்வரையான சேமிப்புக்கள் ஏற்பட்டிருந்தன எவ்வாறாயினும் இவை தொடர்பிலான விளக்கங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(ஆ) நீண்டகாலம் இடம் பெயர்ந்தோருக்கான வேலைத்திட்டம் - 2017 இன் பிரகாரம் மாலையிட்டான் கமம் விவசாய வீதி புனரமைப்பிற்காக மதிப்பிட்டுத்தாளின் பிரகாரம் 1050 மீற்றர் நீளம் 3.6 மீற்றர் அகலம் உடையதாக அமைக்கப்பட்டது என காட்டப்பட்டு இறுதிக் கொடுப்பனவிற்கான உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் பௌதீக பரீட்சிப்பின் போது 950 மீற்றர் நீளமும் 2.7 மீற்றர் அகலமும் உடைய வீதியே

அமைக்கப்பட்டிருந்தது இதனால் ரூபா 624,172 பெறுமதியான கொடுப்பனவானது மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது..

(இ) இடம் பெயர்ந்தோருக்கான நீண்டகால வேலைத்திட்டம் - 2017 இன் கீழ் றசூல் புதுவெளி குளக்கட்டு வீதி புனரமைப்பிற்கான மதிப்பிட்டுத்தாளின் பிரகாரம் 2000 மீற்றர் நீளம் 3 மீற்றர் அகலம் உடையதாக அமைக்கப்பட்டதாக காட்டப்பட்டு இறுதிக் கொடுப்பனவிற்கான உறுதிச்சீட்டு தயாரிக்கப்பட்டு கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இருந்தும் பௌதீக பரீட்சிப்பின் போது 1500 மீற்றர் நீளமும் 3 மீற்றர் அகலமும் உடைய வீதியே அமைக்கப்பட்டிருந்தமையால் ரூபா 483,750 பெறுமதியான கொடுப்பனவானது மேலதிகமாக மதிப்பிடப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) கல்வி அபிவிருத்தித் திட்டம் - 2017 இன் கீழ் நானாட்டான் பிரதேச செயலகத்தினால் மடுக்கரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் கட்டிட திருத்தத்தின் போது குறிப்பிட்ட சில வேலைகள் உண்மையாக செய்யப்பட்ட அளவினை விட மதிப்பீட்டுத்தாளில் கூடுதலாக காட்டப்பட்டமையால் ரூபா 50,640 பெறுமதியான கொடுப்பனவு மேலதிகமாக மேற்கொள்ளப்பட்டிருந்து. மேலும்சில வேலைகளின் போது அகற்றப்பட்ட ஓடுகள், மற்றும் மரச்சட்டங்கள் பாடசாலையில் காணப்படவில்லை, மற்றும் மதிப்பிட்டில் உள்ளடங்கப்படாது மேற்கொள்ளப்பட்ட ரூபா 24,784 பெறுமதியான மேலதிக வேலையானது உரிய முறையில் அனுமதி பெறப்பட்டிருக்காது மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) கல்வி அபிவிருத்தித் திட்டம் 2017 இன் கீழ் முசலி பிரதேச செயலகத்தினால் மன்/மருதமடு அரச தமிழ் கலவன் பாடசாலை கட்டிட நிர்மானத்தின் போதுகுறிப்பிட்ட சில வேலைகளின் அளவீடுகள் பௌதீக பரீட்சிப்பின் போது குறைந்த அளவில் காணப்பட்ட போதும் மதிப்பிட்டுத் தாளில் கூடுதலாக காட்டப்பட்டதால் ரூபா 93,830 பெறுமதியான கொடுப்பனவு மேலதிகமாக ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) 2017 ஆண்டிற்கான தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் (ONUR) நிதி அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்படும் திட்டத்தின் மூலம் சந்திரகாசன் குளக்கட்டு நிர்மாணத்திற்காக வனவளத்திணைக்கள கட்டளைச்சட்டத்தின் 7(i) பந்தியின் (K) பிரிவின் பிரகாரம் பயிர் செய்கை நடவடிக்கைக்காக காடுஅழித்தல், மண் அகழ்தல் அல்லது தோண்டுதல் என்பவற்றிற்கு அனுமதிபெற்றுக்கொள்ளப்பட்டிருக்காது குளக்கட்டின் இரு பக்கத்திற்கும் புற்கள் பதித்தமை தொடர்பில்(Supplying fort sods to site preparation and dressing of surface)570 சதுர மீற்றர் கூடுதலாக காட்டப்பட்டுரூபா 57,000 மேலதிகமான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(எ) மடு பிரதேசசெயலக பிரிவினூடாக தேசிய நல்லிணக்க ஒருமைப்பாட்டிற்கான நிதியினை பயன்படுத்தி 2017 ஆம் ஆண்டில் பூமலர்தான் கிராமத்திற்கான கூட்டுமொத்தம் ரூபா 21.51 மில்லியன் பெறுமதியான குடிநீர் திட்டத்திற்காக ரூபா 2,512,542 தேசிய நீர் வழங்கல் சபைக்கு செலுத்தப்பட்டு ஐந்து மாதங்கள் கடந்த நிலையிலும் குறித்ததிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டில் பயனாளிகளுக்கு கருவாடு காயவைப்பதற்கான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான மதிப்பீடு, பெறுகைக்குழுத் தீர்மானத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட நிறுவன கூறுவிலை, உறுதிச்சீட்டுக்கள் என்பவற்றை நேரடி

கணக்காய்வு பரீட்சிப்பிற்குட்படுத்தியதில் வழங்கப்பட்ட கணியச்சிட்டையின் படி ஒவ்வொன்றும் ரூபா 76,600 பெறுமதியான10 உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டதாககாட்டப்பட்டிருந்தது ஆயினும் அவற்றுக்கு பயன்படுத்தப்பட்ட மூலப் பொருட்களின் அளவுகளை கணிய அளவீடு செய்த போது அட்டவணையில் காட்டப்பட்ட அளவுகளே இருந்தமையால் ஒவ்வொன்றும் ரூபா 56,518 பெறுமதியில் செய்யப்படக் கூடியதாக இருந்தும் கூடிய அளவீடு காட்டப்பட்டதால் ஒவ்வொன்றிலும் ரூபா 20,082 வீதம் 10 உபகரணத்திலும் ரூபா 200,820 மேலதிககொடுப்பனவு ஏற்பட்டிருந்தது.

(ஐ) 2017 ஆம் ஆண்டிற்கான தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமானஅலுவலகத்தின் (ONUR) நிதி அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்படும் திட்டத்தின் மூலம் சோலையன்கட்டுக் குளம் புனரமைப்பு செய்யப்பட்ட போது உறுதிச்சீட்டின் பிரகாரம் குளக்கட்டின் இரு மருங்கிற்கும் புல் பதிப்பதற்காக 2188 சதுரமீற்றர் அளவிற்கு ரூபா 533,872 தொகை வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் நேரடி செவ்வைபார்த்தலின் போது (100X1.5X1.5) 2,088 சதுரமீற்றர் அளவுப்பகுதிக்கு மட்டுமே புற்கள் பதிக்கப்பட்டிருக்காமையினால் ரூபா 24,400 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

## 2.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

மாவட்ட செயலகத்திற்குரிய 26511 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்கணக்கிற்கான பாரளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் பின்வருமாறு

| **செலவினம்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ள படியானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ள படியானவை | உச்ச எல்லை | உள்ள படியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 17.00 | 15.52 | 10.00 | 10.94 | 50.00 | 46.87 |

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

2017 திசெம்பர் 31 இல் நிலுவையாகவிருந்த அரச உத்தியோகத்தர் முற்பணக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2.06 மில்லியன் ஆக கடந்த 01 தொடக்கம் 05 ஆண்டுகளாக அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான மட்டத்தில் காணப்பட்டன.

## 2.7 பொது வைப்புக் கணக்குகள்

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள ஏழு பொது வைப்புக் கணக்குகளின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டு மொத்தம் ரூபா 151.15 மில்லியன்ஆகும்.

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 வருடங்களை விஞ்சிய கூட்டுமொத்தம் ரூபா 12.70 மில்லியன் தொகையான 157 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாவட்ட செயலகமானது ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்காக பல்வேறு பணிகளுக்காக வழங்கப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 1.50 மில்லியன் தொகையான பணம், குறித்த பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படாது வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது.

## 2.8 பதிவேடுகள் மற்றும் ஏடுகளைப் பேணாமை

மாவட்ட செயலகத்தினால் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளது வரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. விபரம் வருமாறு

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை/ நிதிப்பிரமாணம் 502(2)இன் பிரகாரம் அதன் 11 ஆம் பின்னிணைப்பு |
| (ஆ) | கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை. |
| (இ) | காசோலைகள், காசுக்கட்டளைகள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 451 |
| (ஈ) | உத்தியோகபூர்வ தொலைபேசிப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 854(1) |
| (உ) | பிணைகள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |
| (ஊ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |
| (எ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| (ஏ) | அடியிதழ்சேர் புத்தக பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 |
| (ஐ) | வாகன நிரற்படுத்தும் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647 (உ) |
| (ஒ) | எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய் இருப்புப் புத்தகம் | நிதிப்பிரமாணம் 1647(ஈ) |

| | | |
|---|---|---|
| (ஓ) | பெறுகைக் குழுவின் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுக்களின் வருகைப் பதிவேடு | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி |
| (ஔ) | குழுக் கூட்ட அறிக்கைகள் | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.3(அ) ஆம் வழிகாட்டிக்கமைய பெறுகைகள் கைநூலின் 2.11.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கமைவானது. |
| (க) | கேள்வி கோரல் பதிவேடு | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.2.1 ஆம் வழிகாட்டிக்கமைய பெறுகைகள் கைநூலின் 5.2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கமைவானது. |

## 2.9 மனித வளங்கள் முகாமைத்துவம்

### 2.9.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஸ்ட மட்டம் | 34 | 24 | 10 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 19 | 01 | 18 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 543 | 380 | 171 | 08 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 68 | 48 | 20 | - |
| | மொத்தம் | 664 | 453 | 219 | 08 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் 219 பதவியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முறையானஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த 08 பதவியினர் தொடர்பாக அங்கீகாரமொன்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.10 நிதிக் கட்டுபாட்டுடன் தொடர்புடைய பணிகளை ஒப்படைத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு உரிய பணிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான நிதி அதிகாரங்களை ஒப்படைக்கும் போது அவ்வாறு ஒப்படைக்கும் உத்தியோகத்தரின் பெயரில் அல்லது பதவியில்

அல்லது குறிப்பாக நிர்ணயித்து அந்தந்த உத்தியோகத்தருக்கு ஒப்படைக்கப்பட்ட பணிகளை காட்டும் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதிவேடு பொதுவாக மாவட்ட செயலகத்தில் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கவில்லை.

**2.11 அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்**

----------------------------------------------------------------------

நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களால் பிணை வைக்கப்பட்டிருக்காமையால் அவர்களது தவறுகளால் ஏற்படக்கூடிய நட்டங்களை ஈடு செய்யக்கூடிய வகையில் முன்னேற்பாடான செயற்பாடுகளை மேற்கொள்ள மாவட்டச் செயலாளர் தவறியிருந்தார்.